செ.வெ.எண்: 79 நாள்:18.7.2019

**தூத்துக்குடியில் புனித.பனிமய மாதா பேராலய திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்து துறை அலுவலா்களுடன் ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.சந்தீப் நந்தூாி இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடியில் புனித.பனிமய மாதா பேராலய திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்து துறை அலுவலா்களுடன் ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.சந்தீப் நந்தூாி இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளா் திரு.அருண் பால கோபாலன், இ.கா.ப., அவா்கள் முன்னிலையில் இன்று (18.7.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.சந்தீப் நந்தூாி இ.ஆ.ப., அவா்கள் பேசியதாவது:

தூத்துக்குடியில் புனித.பனிமய மாதா பேராலய பெருவிழா நிகழ்வுகள் ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 05 வரை நடைபெறவுள்ளது. திருவிழாவில் கலந்து கொள்ள அதிக அளவிலான மக்கள் வருகை தருவாா்கள். காவல்துறையின் மூலம் போதிய பாதுகாப்பு வசதிகளை செய்திட வேண்டும். திருவிழா காலங்களில் தொற்று வியாதிகள் பராமல் தடுக்கும் வகையில் முன்னெச்சாிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் சுகாதார துறையின் மூலம் கோவில் வளாகத்தில் திருவிழா காலங்கள் முழுவதும் மருத்துவ குழுவினா் 24 மணி நேரமும் ஆம்புலன்ஸ் வசதியுடன், அவசர மருத்துவ சிகிச்சை பெறும் வகையில் வசதியுடனும், தயாா் நிலையில் இருக்க ஏற்பாடு செய்திட வேண்டும். திருவிழா காலங்களில் தடையின்றி குடிநீா் கிடைத்திட ஏற்பாடு செய்திட வேண்டும். தீயணைப்புத்துறையின் மூலம் தீ அணைப்பு ஊா்தி முழுவதும் தண்ணீா் நிரப்பப்பட்டும், மருத்துவ ஊா்தியும் தயாா் நிலையில் வைத்திருக்க வேண்டும். போக்குவரத்து துறையின் மூலம் கூடுதலான பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருவிழா நாட்களில் தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் கூடுதல் பணியாளா்களை கொண்டு துப்பரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மின்துறையின் மூலம் மின்தடையின்றி வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், திருவிழா காலங்களில் கடைகளில் நெகிழியை பயன்படுத்தக்கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உணவு பாதுகாப்பு அலுவலா் அவ்வப்போது திருவிழாவுக்கு சென்று கடைகளில் உள்ள உணவுகளை ஆய்வு செய்ய வேண்டும். திருவிழா சிறப்பாக நடைபெற அனைத்துத்துறை அலுவலா்களும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்கள் பேசினாா்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலா் மரு.மு.வீரப்பன், சாா் ஆட்சியா் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்களின் நோ்முக உதவியாளா் (பொது) திரு.தியாகராஜன், உதவி இயக்குநா் (ஊராட்சிகள்) திரு.உமா சங்கா், சமூக பாதுகாப்பு திட்ட துணை ஆட்சியா் (பொ) திரு.சுகுமாா், பங்கு தந்தை திரு.குமாா்ராஜா, மற்றும் அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**